**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 214 of 2024

DATE :24.03.2026

Depositions of witness for Prosecution

PW:7

| Name | குமார் | Caste | |
|---|---|---|---|
| Father/Husband's Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24 th day of March 2026

**(எதிரி ஆஜர். )**

**முதல் விசாரணை : –**

நான் தற்பொழுது மதுரை நகர் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ம் கடந்த 29.11.2017 அன்று காலை 10.00 மணிக்கு, வத்திராயிருப்பு காவல் நிலையத்தில் பணியில் இருந்த பொழுது, தம்பிபட்டியைச் சேர்ந்த ராஜாராம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று, மனு எண் 440/2017 பதிவு செய்து, சம்பவ இடத்தை பார்வையிட்டு, சேதம் ஏற்பட்டிருந்த வாழை மரக்கன்றுகள் மற்றும் சேதம் அடைந்த குடிசைகளுக்காக சேதமதிப்பு வேண்டி வத்திராயிருப்பு தோட்டக்கலை உதவி இயக்குனர் அவர்களுக்கும், குடிசையின் மதிப்பு வேண்டி வத்திராயிருப்பு முடக்கு தெருவை சேர்ந்த சன்னாசி என்பவருக்கும் வேண்டுகோள் கடிதம் கொடுத்து, வாழைக் கன்றுகளுக்கு ஏற்பட்ட சேதத்துக்கு ரூ. 18,000/– என்றும், குடிசைக்கு ரூ. 6,450/– சேத மதிப்பு சான்றிதழ் பெறப்பட்ட காரணத்தினால், மேற்படி மனுவின் தன்மைக்கு ஏற்ப காவல் நிலைய குற்ற எண் 482/2017, பிரிவுகள் 447, 294( b) and 506(2) IPC r/w 3 of TNPPDL Act ன்

கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கு கோப்புகளை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் முன்னிலைக்கு சமர்ப்பித்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

எதிரி ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு